00067

THE OPEN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

பட்டமேல் விசேட தேவைகள்சார் கல்வி டிப்ளோமா

இறுதிப் பரீட்சை - **2010/2011**

**ESP 1137 -** புனர் நிர்மானமும் சமுதாய அடிப்படையிலான புனர் வாழ்வும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 26.05.2012 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி **I** இல் எல்லா வினாக்களுக்கும், பகுதி **II**இல் எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

01. “குறைபாடுகள்” பற்றிய உலக சுகாதார நிறுவனத்தின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக.

02. “சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு” பற்றிய ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக.

03. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின்(CBR) ஐந்து(05) கூறுகளைப் பெயரிடுக.

04. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு என்பது இப்போது ஆறு(06) வெவ்வேறு கூறுகள் கொண்ட சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. அவற்றில் ஐந்தை(05) பெயரிடுக.

05. விசேட தேவைகளுடன் கூடிய புனர் நிர்மானத்துக்குள்ளாகும் மாணவர்களின் ஒழுங்கான வகுப்பொன்றின் வகுப்பாசிரியையின் ஐந்து(05) வகிபாகங்களைக் குறிப்பிடுக.

06. சமூகப் பெயர்ச்சி(Social mobilization) என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

07. இயலாமையுடையோரின் புனர் நிர்மானத்தின் போது அரசியற் பங்களிப்பின் நீண்டகாலப் பேறுகள் ஐந்தைப்(05) பெயரிடுக.

08. ‘வாழ்வு மற்றும் புனர்வாழ்வு’ என்ற சொற் பதங்கட்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(05 × 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

09. (i) ‘இயலாமை’ எனும் எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக

(06 புள்ளிகள்)

(ii) ஒரு உதாரணம் வழங்குவதன் மூலம் இயலாமையின் மருத்துவ மாதிரியை விளக்குக.

(07 புள்ளிகள்)

(iii) ஒரு உதாரணம் மூலம் இயலாமையின் சமூக மாதிரியை விளக்குக.

(07 புள்ளிகள்)

10. (i) சமுதாய அடிப்படையிலான புனர் நிர்மானத்தின் ஆரம்பக் குறிக்கோள் என்றால் என்ன?
(04 புள்ளிகள்)

(ii) சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது. (குறைந்தது 6 வகைகளைத் தருக)

(6 புள்ளிகள்)

(iii) இயலாமையுடைய மக்களை சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வினூடாக வலுவூட்டக்கூடிய ஐந்து அணுகுமுறைகளைக் கூறி, அவற்றில் ஒரு அணுகுமுறையை உதாரணத்துடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

11. (i) விசேட தேவைகளுடைய பிள்ளைகளின் புனர் நிர்மானப் பணியில் குடும்பத்தின் வகிபாகத்தை உதாரணங்களுடன் விளக்குக.
(07 புள்ளிகள்)

(ii) இயலாமை உடைய மக்களின் புனர் நிர்மானப்பணியில் சமுதாயத்தின் வகிபங்கை உதாரணங்களுடன் விளக்குக.
(07 புள்ளிகள்)

(iii) புனர் நிர்மானக் குழுவில் சகல தனிநபர்களும் சம தகுதி நிலையை வகிக்கும் போது சமுதாயப் பங்களிப்பு ஒரு செயல்முறையாகும். உதாரணங்கள் மூலம் சமுதாயப் பங்களிப்பு என்பதை விளக்குக.
(06 புள்ளிகள்)

12. (i) செயற்படுதல், இயலாமை சுகாதாரம் ஆகியன தொடர்பான சர்வதேசப் பாகுபாட்டின்(ICIDH) இயலாமை பற்றிய எண்ணக்கருவின் புதிய வரைவிலக்கணத்தை விவரிக்குக.
(10 புள்ளிகள்)

(ii) அரசியல் மற்றும் பொருளாதார அணுகுமுறை மிக வலுவானதாக இருப்பதுடன், இயலாமையுடைய மக்களின் உள்ளூரப் பொருளாதாரம் மற்றும் கலாசார வாழ்விலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. உதாரணங்களுடன் இக் கூற்றை விளக்குக.
(10 புள்ளிகள்)

13. (i) "விசேட தேவையுடைய பிள்ளைகள் பாடசாலையிலிருந்து பொருத்தமான பாடசாலைச் சூழலுக்கு மாறும் வகையில் அவர்களைத்தயார் செய்யும் பொருட்டு ஒரு பாடசாலை வழங்க வேண்டிய திட்டங்கள், சேவைகள் மற்றும் பொறுப்புகள்" என்ற தலைப்பில் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.
(12 புள்ளிகள்)

(ii) விசேட தேவையுள்ள பிள்ளைகட்கு ஒரு தொழிலிற்கான தனிநபர் திட்டத்தை (Individualise Plan for Employment) எவ்வாறு ஒரு பாடசாலையினால் அபிவிருத்தி செய்யமுடியும்?

14. இயலாமையுடையோர் பற்றிப் பின்வரும் தலைப்புகளில் சிறு குறிப்பு எழுதுக.

(a) மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனம்
(b) இயலாமை தொடர்பான தேசியக்கொள்கை இலங்கை
(c) புனர் நிர்மானம்
(d) சுய உதவிக்குழுக்கள்(SHGs)

(பதிப்புரிமை பெற்றது)